# C

SL. No. : G

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 57 ]
Total No. of Questions : 57 ]
ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T**

**CCE PR**
**REVISED**

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8
[ Total No. of Printed Pages : 8
**Code No. : 85-T**

## ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

## Subject : SOCIAL SCIENCE

**( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )**

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Repeater )**

ದಿನಾಂಕ : 26. 06. 2019 ] [ Date : 26. 06. 2019
ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ-12-45 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-45 P.M.
ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 57-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10 \times 1 = 10$

1. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நடைபெற்ற வாணிகத்தில் தன்னாட்சி பெற்ற வணிகர்கள்.

(A) இத்தா ய வணிகர்கள்

(B) அரேபிய வணிகர்கள்

(C) பிரெஞ்சு வணிகர்கள்

(D) இந்திய வணிகர்கள்.

2. தத்து குழந்தைகளின் உரிமை இல்லா முறையை (வாரிசு இழப்பு கொள்கை - Doctrine of lapse) ஏற்படுத்தியவர்

(A) வெல்லெஸ் பிரபு (B) காரன்வா ஸ் பிரபு

(C) டல்ஹௌசி பிரபு (D) வில் யம் பென்டிங் பிரபு.

3. எந்த இரு நாடுகளுக்கிடையே பனிப்போர் நடை பெற்றது ?

(A) அமெரிக்கா மற்றும் சீனா

(B) சீனா மற்றும் சோவியத் ரஷ்யா

(C) அமெரிக்கா மற்றும் ஜப்பான்

(D) அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா.

4. இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கிடையே நடைபெற்ற தாஷகண்ட உடன்படிக்கை ஏற்பட்ட ஆண்டு.

(A) 1962 (B) 1963

(C) 1965 (D) 1966.

5. பின்வருவனவற்றுள் எது முறைப்படுத்தப்படாத பணியாளர்களின் பண்பியல்பு ஆகும்.

(A) பணி

(B) இடப் பெயர்ச்சி

(C) கூ

(D) ஊதியமற்ற உழைப்பு.

6. இந்தியாவில் மிக உயர்ந்த சிகரம்.

(A) இமாலயம் (B) கௌரி சங்கர்

(C) Mt. எவரெஸ்ட் (D) காட்வின் ஆஸ்டின்/Mt.$k_2$.

7. நீரில் மூழ்கி அசையும் வேர்களை கொண்ட தாவரங்களை நாம் எவ்வகை காடுகளில் காணலாம்.

(A) பசுமை நிறைந்த காடுகள்

(B) மான்சூன் காடுகள்

(C) மாங்குரோவ் காடுகள்

(D) மலைப்பிரதேச காடுகள்.

8. ஒரு நாட்டின் ஓராண்டு மொத்த பொருட்களின் உற்பத்தி மற்றும் சேவை ஆகியவற்றின் மதிப்பீடு எவ்வாறு கருதப்படுகிறது ?

(A) மாநில வருமானம்

(B) தேசிய வருமானம்

(C) மாநில மற்றும் தேசிய வருமானம்

(D) தனிநபர் வருமானம்.

9. டெ ஷாப்பிங் என்றால்.

(A) வீட்டி ருந்தபடியே வாணிகம் புரிவது

(B) பன்னாட்டு அளவில் வாணிகம் புரிவது

(C) உள்நாட்டு வாணிகம்

(D) சில்லரை வணிகம்.

10. ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய கழகத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம்.

(A) ரோம்

(B) புது டெல்

(C) நியூ யார்க்

(D) ஜெனிவா.

II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி : 14 × 1 = 14

11. இந்தியாவில் ஆங்கிலேயர் தங்கள் வரிவசூல் நலனை பாதுகாத்து கொள்ள எவ்வாறு அரசியல் அதிகாரத்தை ஏற்படுத்தினர் ?

12. வங்கப்பிரிவினைக்கு காரணம் என்ன ?

13. வடிகால் கொள்கையை பற்றி எடுத்துரைத்தவர் யார் ?

14. திப்பு சுலத்தானுக்கு எதிராக ஆங்கிலேயர் ஏன் பகைமை பாராட்டினர் ?

15. ஆங்கலேயருக்கு எதிராக ஹலஹள்ளி வேடர்கள் ஏன் போராடினர் ?

16. இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிக்கிடையே ஓயாப்போர் ஏற்படக் காரணம் என்ன ?

17. அமைதி பள்ளத்தாக்கு இயக்கம் எங்கு நடைபெற்றது ?

18. செம்மண் எவ்வாறு உருவாகிறது ?

19. சந்தன மரங்கள் எவ்வகை காடுகளில் காணப்படுகின்றன ?

20. மாங்கனீசு தாது ஏன் இரும்பு கலவை உலோகம் எனப்படுகிறது ?

21. மத்திய அரசு ஏன் சரக்கு மற்றும் சேவை வரியை (GST) ஏற்படுத்தியது ?

22. தற்போது நுகர்வோர்களை பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை ஏன் அவசியமாகிறது ?

23. மக்கள் கூட்டம் என்றால் என்ன ?

24. பசுமை நிறக்காடுகள் எப்போதும் பசுமையாகவே இருக்க காரணம் என்ன ?

III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டி ருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளி :

25 × 2 = 50

25. வெல்லெஸ் பிரபுவின் காலக்கட்டத்தில் ஆங்கிலேயர் எவ்வாறு தங்கள் பேரரசை விரிவு படுத்தினார் ?

அல்லது

ஆங்கிலேய சீக்கியப் போரின் விளைவுகள் யாவை ?

26. சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்கு ஒரு தூண்டுதல் சக்தியாக எவ்வாறு விளங்கினார் ?

27. கி. பி. 1857 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும் புரட்சியின் அரசியல் காரணங்கள் யாவை ?

28. நம் நாட்டு விடுதலைக்கு பிறகு மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்பட்டது ?

29. ஜெர்மனியின் வீழ்ச்சிக்கு ஹிட்லர் எவ்வாறு காரணமானார் ?

30. அமைதியை விரும்பும் இந்தியா ஏன் கட்டுப்படுத்தப்பட்ட படை குறைப்பை வ யுறுத்துகிறது ?

31. மனித உரிமை பிரகடனத்திற்கு எந்த வரலாற்று நிகழ்ச்சிகள் காரணமாக அமைந்தன ?

32. பசியின் காட்டிகளை நாம் எவ்வாறு கண்டுபிடிக்கலாம் ?

33. இந்திய காலநிலை இடத்திற்கு இடமும் பருவ காலங்களுக்கு பருவக்காலமும் ஏன் வேறுபடுகிறது ?

34. வளரும் நாடுகளுக்கு நீர் எவ்வாறு ஓர் இன்றியமையாத வளமாக விளங்குகிறது ?

35. தூரப்புலனுணர்வு தொழில் நுட்பம் எவ்வாறு பயன்படுகிறது ?

36. குறைந்த இறப்பு விகிதம் எவ்வாறு மக்கள் பெருக்கத்திற்கு காரணமாகிறது ?

37. வளரும் நாடுகளில் துரித உணவு பழக்க முறை எவ்வாறு ஆரோக்கிய சீர்கேட்டை ஏற்படுத்துகிறது ?

38. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கு எடுக்கப்படும் செயல் பாடுகள் யாவை ?

39. இந்திய விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு மலர் தோட்டக்கலை எவ்வாறு உதவுகிறது ?

40. இரட்டையாட்சியின் இயல்புகள் யாவை ?

41. துணைப்படைத் திட்டத்தின் நிபந்தனைகள் யாவை ?

42. பல்வகையான பா ன பாகுபாடுகள் யாவை ?

43. மண் அரிப்பினால் ஏற்படும் விளைவுகள் யாவை ?

44. இந்தியாவில் நீர்ப்பாசனம் ஏன் மிகவும் அவசியமாகிறது ?

45. வட இந்திய சமவெளியின் முக்கியத்துவம் குறித்து எழுதுக ?

46. அஞ்சல் அலுவலகங்கள் ஆற்றும் அரும் பணிகள் யாவை ?

47. நேரிடை மற்றும் மறைமுக வரிகளுக்கு இரு உதாரணங்கள் தருக.

48. உலகமயமாக்கல் ஒரு நாட்டில் எவ்வாறு பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது.

49. ஆரிய சமாஜத்தின் நோக்கங்கள் யாவை ?

IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடை தருக : $6 \times 3 = 18$

50. ஆங்கிலேயரின் நிலவரித்திட்டம் எவ்வாறு இந்திய விவசாயிகளை பாதித்தது ?

*அல்லது*

ஆங்கிலேயருக்கு எதிராக கித்தூரில் ஏற்பட்ட போராட்டம் குறித்து விவரி.

51. ஏழ்மையை போக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

*அல்லது*

ஐக்கிய நாட்டு சபை ஆற்றிய அரும் சாதனைகள் யாவை ?

52. தீண்டாமையை அடியோடு ஒழிக்க எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் யாவை ?

*அல்லது*

முறைப்படுத்தப்படாத பணியாளர்கள் எதிர்கொள்ளும் சமூக மற்றும் பொருளாதார சவால்கள் யாவை ?

53. இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை அமைக்கத் தேவையான காரணிகள் யாவை ?

*அல்லது*

வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான ஆறு காரணங்கள் யாவை ?

54. ரிசர்வ் வங்கி இந்திய நாட்டு நலனுக்காக எவ்வாறு செயல்படுகிறது ?

*அல்லது*

வரிகளை விடுத்து அரசு எவ்வாறு வருமானத்தை பெறுகிறது ?

55. சேமிப்பு வங்கி கணக்கு மற்றும் நடப்பு வங்கி கணக்கு ஆகியவற்றிற்கிடையே காணப்படும் வேறுபாடுகள் யாவை ?

*அல்லது*

ஏக்தா கபூர் மற்றும் கிரண் மஜூம்தார் ஷா ஆகியோர் ஆற்றிய சாதனைகள் யாவை ?

V. பின்வரும் வினாவிற்கு பத்து வாக்கியங்கள் வரை விடை தருக : 4

56. காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய செயல் திட்டங்கள் குறித்து விவரி.

VI. 57. இந்தியத் தரைப்படம் வரைந்து, பின்வரும் இடங்களைக் குறிக்கவும் : 1 + 3 = 4

a) காண்ட்லா

b) டிக்பாய்

c) கன்னியாகுமாரி.

**பார்வைத்திறன் அற்றோர்க்கான வினா *:* (வினா எண் 57க்கான மாற்று வினா)**

பல்நோக்கு ஆற்று பள்ளத்தாக்கு அணைக்கட்டு திட்டங்களின் நோக்கங்கள் யாவை ? 4